1973 நவம்பர் 26]

திரு. சோ. அழகர்சாமி: இந்தத் திட்டத்தைத் துவக்க வேண்டுமென்று ஆரம்ப நடவடிக்கை எடுத்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டன. அது ஒரு பெரிய வரட்சி ஏரியா—டிரை ஏரியாவாக இருப்பதினுல், கொஞ்சம் துரிதப்படுத்தி, வேலையைச் சீக்கிரம் ஆரம்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: வருவாய் வாரியத்திடமிருந்து அறிக்கை கிடைத்தவுடன் அரசு அதன் மீது முடிவு எடுத்து வேலை துவங்கும்.

கருப்பா நதித் திட்டப் பணிகள்

* 397 **வினு—திரு. ச. சங்குமுத்து தேவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கருப்பா நதித் திட்டத்தில் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான பெரிய இயந்திரங்களை வைத்து வேலை நடந்தாலும், தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமான லாரி மூலம் மண் வேலைகள் செய்யப்படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) திட்டத்தில் மண் எடுக்கும் இடங்களில் பெரிய பாறைகள் பரவலாகக் கிடப்பதனுல் அங்கு அரசுக்குச் சொந்தமான மண் எடுத்துச் செல்லும் இயந்திரங்களை உபயோகப்படுத்துவது சிக்கனமில்லாததும் கடினமானதுமாகும். ஆகவே, இந்த இடங்களில் ஆட்களை வைத்துத்தான் மண்ணை வெட்டி எடுக்க முடியும். அவ்வாறே செய்யவும் பட்டன. ஆகையால் இடத்தின் நிலவரத்தைக் கருத்தில் கொண்டு லாரிகள் மூலம் மண் கொண்டு செல்லப்பட்டு மண் அணை கட்டப்படுகிறது. பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான நான்கு 'டிப்பர்கள்' நான்கு லாரிகள் உள்ளன. இத் திட்டத்தில் பணியாற்றும் ஒப்பந்தக்காரர்களுக்குப் பொதுப்பணித் துறை வேலைகள் செய்வதற்கு இவை வாடகைக்கு விடப்படுகின்றன. இவற்றைத் தவிர இப்போது இத் திட்டத்தில் தனி நபர்களுக்குச் சொந்தமான பத்து லாரிகளும் வேலை செய்து வருகின்றன.